**பாணந்துறை பிரதேச சபை - 2023**

------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பாணந்துறை பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் பாணந்துறை பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை.

| உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நியமத்தின் பந்தி இலக்கம் 6.3 இன் பிரகாரம் காணி மற்றும் கட்டிடங்கள் தனித்தனியாக கணக்கீடு செய்ய வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட பெறுமதி ரூபா 266,798,885 ஆன காணி, கட்டிடங்கள் தனித்தனியாக | நிதியல்லாச் சொத்துக்கள் மதிப்பீடு செய்யும் வழிகாட்டியின் பிரகாரம் மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மூலம் மதிப்பீட்டு அறிக்கையைப் பெற்றுக்கொள்வதற்கு | நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | நடவக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | நியமத்தின் பந்தி 6.15 இன் பிரகாரம் சொத்துக்களின் எதிர்கால பொருளாதார நலன்களைப் பயன்படுத்துவதற்கும் மற்றும் அதில் எதிர்பார்ப்புக்களைப் ஏற்றுக்கொள்ளும் வகையில் பெறமானத் தேய்வு முறைமையொன்று தெரிவு செய்து பெறுமானத்தேய்வு செய்யவேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டில் மோட்டார் வாகனங்கள் தவிர ஏனைய ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் பெறுமானத்தேய்வு செயய்யப்பட்டிருக்கவில்லை. | கொம்ரோலர் ஜனரலின் சுற்றறிக்கையின் பிரகாரம் சபையினால் 2023 ஆகஸ்ட் 14 ஆந் திகதி குழுவொன்று நியமிக்கப்பட்டு அந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | நியமத்தின் பந்தி 3.29 மற்றும் அதன் அத்தியாயம் 2 இற்கான வழங்கல் மற்றும் வழிகாட்டியின் EG 6.2 இன் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் விற்பனையால் கிடைத்த ரூபா 22,000 தொகை, கடன் வட்டிக் கொடுப்பனவு ரூபா 1,788,867 மற்றும் மூலதன செலவின மானியம் சரியாக சீராக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் ஆண்டின் போது மூலதன செலவீன மானியங்களை சரியாக சீராக்கப்படும். | - மேற்படி - |

### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முன்னைய ஆண்டுகளில் மூலதன செலவின மானியத்திற்காக கிடைக்கப்பெற்ற தொகையில் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் மீண்டெழும் அல்லாத செலவினங்களுக்காக அரசாங்கத்திலிருந்து மேற்கொள்ளப்பட்ட மாற்றல்களின் பெறுமதி வருமானமாக இனங்காண வேண்டியிருந்த போதிலும் வருமானத்தை | எதிர்காலத்தில் இந்த சீராக்கங்களை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்குகள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உறுதிப்படுத்தாமல் ரூபா 11,820,925 அரசாங்கத்திலிருந்து மேற்கொள்ளப்பட்ட மாற்றல்களாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | 2021 ஆம் ஆண்டு முதல் கொண்டுவரப்படுகின்ற ரூபா 81,000,000 ஆன முத்திரைக் கட்டணத்தை சரிசெய்யும் போது அதில் ரூபா 80,000,000 ஆக ரூபா 1,000,000 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | முத்திரைக் கட்டணம் மற்றும் நீதிமன்ற தண்டப்பணம் இரண்டினதும் கூட்டுமொத்தம் ரூபா மில்லியன் எண்பத்தொன்று ஆகும். | - மேற்படி - |
| (இ) | கிடைக்க வேண்டிய காப்புறுதி இழப்பீட்டின் இறுதி மீதி ரூபா 27,496 ஆக இருந்த போதிலும் ரூபா 102,496 ஆக ரூபா 75,000 அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் பெறவேண்டிய காப்புறுதி இழப்பீடு செலவு மீதியாக காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்வரும் ஆண்டின் போது சரிசெய்யப்படும். | - மேற்படி - |
| (ஈ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய மின்சார கட்டணம் - கெசல்வத்த ரூபா 109,568 ஆக இருந்த போதிலும் ரூபா 7,072 ஆக ரூபா 102,496 குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2024 இன் கணக்குகளில் சீராக்கப்படும். | கணக்குகள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |

### 1.6.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற 08 கணக்கீட்டு விடயங்களுக்குரிய மீதிகள் அதற்குரிய பட்டோலைகளுடன் ஒப்பீடு செய்யும் போது ரூபா 615,134,871 வேறுபாடு காணப்பட்டது. | கண்டறிந்து 2024 இன் கணக்குகளில் சீராக்கப்படும். | வேறுபாடுகளுக்கான காரணங்களைக் கண்டறிந்து சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.4 கணக்காய்விற்காக தேவையான எழுத்து மூல சான்றுகள் இன்மை

| | விடயம் | தொகை ரூபா | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வுச் சான்றுகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | முற்கொடுப்பனவு | 105,732 | பட்டோலை | கண்டறிதல் மேற்கொள்ளப்படுகின்றது. | கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துகின்ற எழுத்து மூல சான்றுகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | பெறவேண்டிய VAT | 404,142 | பட்டோலை | 2023 ஆம் ஆண்டின் போது செலுத்த வேண்டிய தொகை செலுத்துவதற்குப் பதிலாக ரூபா 483,152 வரிக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. | - மேற்படி - |
| (இ) | கடன்பட்டோர் (வாகன காப்புறுதி இழப்பீடு) | 27,496 | பட்டோலை | 2022 ஆம் ஆண்டில் இந்தத் தொகை இவ்வாறு காண்பிக்கப்பட்டுள்ளது. | - மேற்படி - |
| (ஈ) | பெறவேண்டிய கணக்குகள் | 138,276,612 | பட்டோலை | அதற்குரிய அறிக்கையொன்று எதிர்காலத்தில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | - மேற்படி - |
| (உ) | சபையின் முற்கொடுப்பனவுகள் | 4,300,489 | பட்டோலை | இது பல வருட காலமாக கொண்டுவரப்படுகின்ற மீதியாகும். | - மேற்படி - |

## 1.7 இணங்காமைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 160 ஆம் பிரிவு | நிலுவை ஆதனவரி அறவிடுதலின் இறுதிப் படிமுறையாக ஆதனங்கள் தடைசெய்யப்பட்டிருக்கவில்லை. | நிலுவை ஆதனவரி செலுத்தாத வரி இறுப்பாளர்களுக்காக ஆதனங்களை தடைசெய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | பிரதேச சபைகள் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 76,769,142 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 5,923,008 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்பட் ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்ப ட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | ஆதன வரியும் வரியும் | 29,182,126 | 29,268,870 | 31,053,418 | 38,576,875 | 31,334,126 | 31,593,211 | 17,290,160 | 14,303,051 |
| (ii) | வாடகை | 413,200 | 2,237,767 | 4,376,396 | 2,299,534 | 406,000 | 532,200 | 395,200 | 137,000 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 634,000 | 488,000 | 518,500 | 44,500 | 512,000 | 494,000 | 479,000 | 15,000 |
| (iv) | ஏனைய வருமானம் | 13,270,000 | 10,583,600 | 10,572,800 | 54,923 | 2,500,000 | 9,960,000 | 9,960,000 | - |
| | மொத்தம் | 43,499,326 | 42,578,237 | 46,521,114 | 40,975,832 | 34,752,126 | 42,579,411 | 28,124,360 | 14,455,051 |

#### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) வருமான செயல்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் 2023 சனவரி 01 இல் உள்ளவாறு ஒட்டுமொத்த நிலுவை ஆதனவரி வருமானம் ரூபா 40,361,423 ஆக இருந்ததுடன் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதில் ரூபா | வாத்துவ பிரதான அலுவலகத்திலும் மற்றும் கெசல்வத்த, தந்திரிமுல்ல உப அலுவலகங்களிலும் 10 வருடங்களுக்கு மேற்பட்ட ஆதனவரி மீதி ரூபா 4,732,457 தொகையும், 5-9 | நிலுவை வருமானத்தை விரைவாக அறவிடல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 25,321,339 அதாவது 63 சதவீதம் அறவிடப்பட்டிருக்க வில்லை. காலப்பகுப்பாய்வின் பிரகாரம் 10 வருடங்களுக்கு மேற்பட்ட ஆதனவரி ரூபா 3,137,816 ஆகவும் 05 முதல் 09 வருடங்களுக்கிடையிலான காலத்தில் ரூபா 6,873,917 ஆகவும் 03 வருடங்கள் முதல் 05 வருடங்களுக்கிடையிலான காலத்தில் ரூபா 9,003,501 ஆகவும் நிலுவைகள் காணப்பட்டது. | வருடங்கள் வரை ரூபா 9,009,833 தொகையும் ஆக இருந்ததுடன் மீதி ரூபா 8,988,336 ஆகும். | |
| (ஆ) | மீளாய்வாண்டில் ஆதனவரி வருடாந்த சிட்டையிடல் ரூபா 29,268,870 ஆக இருந்ததுடன் அந்த சிட்டையிடலில் ரூபா 13,255,536 அதாவது 45 சதவீதம் மீளாய்வாண்டில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் ரூபா 50,000 ஐ மிஞ்சிய ஆதனவரி அலகுகள் 16 இல் இருந்து அறவிட வேண்டிய நிலுவை மீதி ரூபா 2,952,995 ஆகும். | கெசல்வத்த, தந்திரிமுல்ல, வாதுவ உப அலுவலகங்களில் 2023 ஆம் ஆண்டில் சிட்டையிடல் முறையே ரூபா 9,037,429 தொகை, ரூபா 5,525,219 தொகை மற்றும் ரூபா 14,706,223 ஆக இருந்ததுடன் 2023 ஆம் ஆண்டின் போது முறையே ரூபா 5,752,228 தொகை, ரூபா 2,602,131 தொகை மற்றும் ரூபா 7,233,057 சேர்க்கப்பட்டுள்ளது. | நடப்பாண்டில் மற்றும் நிலுவை வருமானம் அறவிடப்படல் வேண்டும். |
| (இ) | ஆதனவரிக்கான ஆதனங்கள் 05 வருடங்களுக்கு ஒரு தடவை மதிப்பீடு செய்ய வேண்டியிருந்த போதிலும் கெசல்வத்த, தந்திரிமுல்ல உப அலுவலகங்கள் இரண்டிலும் 2007 ஆம் ஆண்டு முதலும் மற்றும் வாதுவ உப அலுவலகத்தில் 2014 ஆம் ஆண்டிலிருந்து ஆதனவரிக்காக ஆதனங்கள் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | மூன்று உப அலுவலகங்களிலும் 2025 ஆம் ஆண்டு முதல் புதிய மதிப்பீடு அமுல்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | ஆதனவரிக்கான ஆதனங்கள் மதிப்பீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஈ) | செயல்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் | மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் அறவிட வேண்டிய வியாபார | நிலுவை வருமானம் விரைவாக |

| | | |
|---|---|---|
| அறவிடவேண்டிய சந்தை நிலைய வாடகை வருமானம் ரூபா 4,438,163 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 1,830,800 அதாவது 41 சதவீதம் மீளாய்வாண்டில் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலைய வாடகை ரூபா 4,438,163 தொகையில் 2023.12.31 இல் உள்ளவாறு ரூபா 4,376,396 அறவிடப்பட்டுள்ளது. | அறவிடப்படல் வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுதல்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) **வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்** | | |
| வருடாந்த பாதீட்டில் அங்கீகரிக்கப்பட்ட ரூபா 34.8 மில்லியன் நிதியேற்பாட்டை விஞ்சி ரூபா 85.25 மில்லியன் நிதியேற்பாடு 2023 இன் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | வருடாந்தம் ஏற்படுகின்ற முன்னுரிமைத் தேவையின் அடிப்படையில் இவ்வாறான நிலைமை ஏற்பட்டுள்ளது. | பாதீட்டு நிதியேற்பாட்டின் பிரகாரம் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) **கைவிடப்பட்ட இலக்குகள்** | | |
| (i) 1998 ஆம் ஆண்டு முதல் 25 வருட காலமாக காணப்படுகின்ற நீர் போக்குவரத்து பிரச்சனைகளுக்கு தீர்வாக ஆரம்பிக்கப்பட்ட திப்பெத்த பிரக்ஞானந்த மாவத்தை கஜுகஹவத்த காணி எல்லையான அரசாங்கத்தின் காணியில் பொது வடிகாண் நிர்மாணித்து மழை நீரை வழிந்தோடச் செய்யும் செயற்திட்டத்தின் கீழ் தனியார் காணியின் ஊடாக செல்லுகின்ற வடிகாண் பகுதி மாத்திரம் ரூபா 253,577 தொகை சபை நிதியத்தில் செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட செயற்திட்டம் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்தது. அதன் காரணமாக வீதியின் | அரசாங்கத்தின் காணியொன்று கைப்பற்றுவதற்காக முன்மொழிவொன்று சமர்ப்பிக்குமாறு பிரதேச செயலாளர் ஆலோசனை வழங்கியிருந்ததுடன் இந்த நீர் வழிந்தோடச் செய்யும் பிரச்சினைகளுக்காக தீர்வை வழங்குவதற்காக நியாயமான முயற்சியொன்று தற்போது சபையினால் மேற்கொள்ளப்படுகின்றது. | செயற்திட்டத்தைப் பூர்த்தி செய்யவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வடிகாணில் மழைநீர் தனியார் காணியில் வழிந்தோடிச் செல்வதால் பாதிப்புக்கு மேலதிகமாக மழைநீர் வழிந்தோடாமையினால் வீதியைப் பயன்படுத்துவதற்கும் முடியாதிருந்தது. | | |
| (ii) | கெசல்வத்த பொதுச்சந்தை பழைய கட்டிடத்தை அகற்றி புதிய கட்டடம் ஒன்றை நிர்மானிப்பதற்காக உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திலிருந்து 2021 செப்தெம்பர் 27 ஆம் திகதி ரூபா 20,000,000 கிடைத்திருந்ததுடன் ஒவ்வொரு மாதமும் அந்த கடன் தொகைக்காக வட்டித்தொகையாக ரூபா 150,000 செலுத்த வேண்டியிருந்தது. வழங்கப்பட்டுள்ள சலுவைக்காலம் ஒரு வருடமும் 07 மாதங்களுமாக இருந்ததுடன் சலுகைக்காலத்தின் இறுதியில் தவணைப்பணம் செலுத்துதல் வேண்டும். 2022 ஏப்ரல் 26 ஆந் திகதி மேலும் ரூபா 4,231,000 கடன் தொகையொன்று உள்நாட்டு கடன் அபிவிருத்தி நிதியத்திலிருந்து பெறப்பட்டிருந்த போதிலும் பொதுச்சந்தையின் நிர்மாண நடவடிக்கைகள் தற்போது இடைநடுவில் நிறுத்தப்பட்டுள்ளதுடன் நிர்மாண நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்காக கேள்விக் கோரலும் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | உள்ளூராட்சி அமைச்சின் பணிப்பாளர் (திட்டமிடல்) இனால் நடாத்தப்பட்ட விசேட கூட்ட அறிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்திற்குரிய மதிப்பீடு தயாரித்து விரைவாக அங்கீகரித்துக் கொள்ளல் மற்றும் செயற்திட்டத்திற்குரிய கால அட்டவணை தயாரித்து அமைச்சுக்கு சமர்ப்பிக்குமாறு முறையான திட்டமுறைமையொன்றை பின்பற்றி ஆலோசனைக்குழு ஒன்று நியமித்து நிர்மாண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக அறிவிக்கப்பட்ட போதிலும் அது தொடர்பாக அதன் பிரகாரம் தற்போது நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | நிர்மாண நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சின் 2018 திசெம்பர் 31 ஆம் திகதிய மற்றும் இலக்கம் 4/2018 என்ற சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் ஆலோசனையின் படி 2020 ஆம் ஆண்டில் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கும் போது சபைக்குச் சொந்தமான சகல நிலையான சொத்துக்களும் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டுமென உள்ளூராட்சி ஆணையாளரின் 2021 பெப்ரவரி 01 ஆம் திகதிய இலக்கம் LGD/10/A/4/ந.கி/2019 என்ற கடிதத்தின் பிரகாரம் அறிவிக்கப்பட்ட போதிலும் சபையினால் 2023 ஆம் ஆண்டின் போது சில காணி கட்டிடங்கள், வீதிகள், மதகுகள், பாலங்கள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் ஆலோசனையின் பிரகாரம் 2024 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கும் போது நிறுவனத்திற்குச் சொந்தமான நிலையான சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) சபையினால் பயன்படுத்தப்படுகின்ற வாகனம் ஒன்றை சபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நான்கு வாகனங்களில் மூன்று வாகனங்களை சபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வாகனங்களைக் கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) 2024 மே 17 அந் திகதி வரையில் சபைக்குச் சொந்தமான 04 வாகனங்கள் செயலிழந்த நிலையில் காணப்பட்டது. | 11 வாகனங்களில் 07 வாகனங்கள் தற்போது விற்றுத் தீர்க்கப்பட்டுள்ளதுடன் மிகுதியான 03 வாகனங்களை எதிர்காலத்தில் பழுதுபார்ப்பதற்கு முடியுமா என பரீட்சிக்கப்படுகின்றது. | வாகனங்களை விற்றுத் தீர்த்தலை துரிதப்படுத்துதல் வேண்டும். |